# தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்

273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018

திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப,

ஆணையர்

ந.க.எண். 1511/2021/கூதே.2 (2) நாள். 05.09.2022

தேர்தல் திட்டம் (EP(CV)(OB)No. 07 /2022)

(Communication of Election Programme)

(1988-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கவிதிகள், விதி எண்.53-ன் கீழ்

*****

1983-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க சட்டம், பிரிவு 33-A-ன் கீழ்அமைக்கப்பட்டு, 1988-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள், விதி எண்.52 மற்றும் 53-ல் விவரித்த படி தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்துவதற்கு, சட்டப்பிரிவு 33(11) மற்றும் விதி எண் 52-A-ன் படி தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், (இனி ஆணையம் எனப்படும்), விதி எண். 53-ன் கீழ் இணைப்பு 1-ல் தரப்பட்டுள்ள விவரப்படியான கூட்டுறவுச் சங்கத்தில் ஏற்பட்டுள்ள நிர்வாக சபை அலுவலர் (Office Bearer) காலியிடத்திற்க்கான (Casual Vacancy) தேர்தலை நடத்துவதற்கு இணைப்பு 2-ல் கண்டுள்ளபடியான தேர்தல் திட்டத்தை இதன் மூலம் அறிவிக்கிறது.

<u>மாவட்ட தேர்தல் அலுவலர் (District Election Officer):</u>

1) விதி எண் 53 (1) (a)-ன் கீழ் நிர்வாக சபை அலுவலர் தேர்தலை நடத்த தேர்தல் அலுவலரை (Election Officer) நியமனம் செய்திடவும்,

2) விதி எண் 53 மற்றும் ஆணையத்தால் இது தொடர்பாக வழங்கப்பட்டுள்ள அறிவுரைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் கட்டளைகள் படி தேர்தல்கள் சுதந்திரமாகவும், நியாயமாகவும், நடப்பதை ஒருங்கிணைப்பு செய்தும், ஒத்துழைத்தும் மற்றும் உறுதி செய்திடவும்,

3) ஒவ்வொரு தேர்தல் நடவடிக்கைகள் முடிவுற்றவுடன் அதுபற்றிய சட்டப்பூர்வமான அறிக்கைகளை தேர்தல் அலுவலர்கள் அனுப்பிடவும்,

4) போதிய காவல்துறை பாதுகாப்பு மேற்கொள்ளவும், வேட்பாளர்கள் விருப்பப்படின் அவரவர்தம் சொந்த செலவில் ஒளிப்பதிவு (Video Coverage) மேற்கொள்ள அனுமதி வழங்கிடவும்,

5) இத்தேர்தல் திட்டப்படியான தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு நிலையிலும் அரசால் அறிவிக்கப்பட்டுள்ள (Covid 19) தொற்று தடுப்பு விதிமுறைகளான, சமூக இடைவெளியினைப் பின்பற்றுதல், முகக்கவசம் அணிதல், உள்ளிட்ட அனைத்து அறிவுரைகளையும் தவறாது கடைபிடிக்கவும் அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு :மேற்கண்டவாறு

ஒம்/-

ஆணையர்

ஆணையருக்காக

**பெறுநர்:**

1. கைத்தறி மற்றும் துணிநூல் துறை ஆணையர் / மாநில தேர்தல் அலுவலர், சென்னை – 108.
2. தொடர்புடைய மாவட்ட தேர்தல் அலுவலர்
3. இணைப்பில் உள்ள சங்கம் – மாவட்ட தேர்தல் அலுவலர் மூலமாக

} தகவலுக்காகவும், உரிய நடவடிக்கைக்காகவும் (மின்னஞ்சல் மூலம்)

**நகல்:**

1. தலைமைச் செயலாளர், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-9
2. அரசு முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புதுறை, புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-9
3. அரசு முதன்மைசெயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, சென்னை-9
4. அரசு கூடுதல் தலைமை செயலாளர், உள்துறை, புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை – 9
5. காவல்துறை இயக்குநர், மயிலாப்பூர், சென்னை – 4.
6. தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்
7. தொடர்புடைய மாவட்ட காவல் கண்காணிப்பாளர்
8. தொடர்புடைய தேர்தல் பார்வையாளர்.

} தகவலுக்காக (மின்னஞ்சல் மூலம்)

| இணைப்பு - 1 | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை-18 | | | | | |
| ந.க.எண். 1454/2022/கூதே2 (2) EP(CV)(OB)- 07/2022 | | | | | |
| மாநில தேர்தல் அலுவலர்: ஆணையர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை | | | | | |
| வ. எண் | மண்டலம்/ சரகம் | சங்கத்தின் பெயர் | தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய அலுவல் நிர்வாகிகள் | | |
| | | | தலைவர் | துணைத் தலைவர் | மொத்தம் |
| 1 | வேலூர் | மூவலூர் இராமாமிர்தம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் | 0 | 1 | 1 |

ஒம்/-

ஆணையர்

ஆணையருக்காக

இணைப்பு – 2

**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18**

ந.க.எண்.1454/2021 கூ.தே2 (2) தேர்தல் திட்டம் எண் – EP(CV(OB))No. 07/2022

| வ. எண் | விவரங்கள் | நாள் |
|---|---|---|
| 1. | தலைவர் / துணைத் தலைவர் தேர்தலுக்கான கூட்ட அறிவிப்பு நாள் (நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன்) | 30.09.2022 |
| 2. | தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல் நாள் | 07.10.2022<br>நேரம் 10 மு.ப முதல் |

ஒம்/–
ஆணையர்
ஆணையருக்காக